கிரேடைக் கட்டுப்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா அல்லது அதைத் தொடர்ந்து வைக்கவேண்டும் என்கிற யோசனை இருக்கிறதா? சர்க்காரின் கொள்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஹையர் கிரேடை செகண்டரி கிரேடாக மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான் கொள்கை. அந்த வகையில் மாற்றிக்கொண்டும் வருகிறோம். எப்படியும் எதிர்காலத்தில் ஹையர் கிரேடே அல்லாத வகையில், அந்த அடிப்படையில்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

* 101 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று நிறுவும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் முதலிய பெரிய நகரங்களிலிருந்து மாணவர்கள் வெளியே சென்று படிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு வசதி செய்துகொடுக்க, இனிமேலாவது அந்த நகரத்திலே ஓர் ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியைத் தொடங்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, மாநில முழுதும் 115 ஆதாரப் பள்ளிகளும், நான்-பேஸிக் பயிற்சிப் பள்ளிகள் 20-ம் இருக்கின்றன. அவற்றில் கோவை மாவட்டத்திலே 13 பள்ளிகள் இருக்கின்றன. அந்த நிலையில் மேலும் பயிற்சிப் பள்ளி தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : கோவை மாவட்டத்திலே கோபியிலிருந்து 25 மைல் சுற்றளவில் எவ்விதப் பயிற்சிப் பள்ளியும் கிடையாது. அந்த நகரத்திலும் வட்டத்திலும் 7, 8 ஆண்கள் பள்ளிகளும், இரண்டு பெண்கள் பள்ளிகளும் இருக்கின்ற காரணத்தால், கோபியில் ஆண்களுக்கோ அல்லது பெண்களுக்கோ ஒரு பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்ட மாதிரி, இப்பொழுது அமைந்திருக்கும் பயிற்சிப் பள்ளிகளே போதுமானவையாக இருக்கின்றன. பயிற்சி பெறும் ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் வேலை அமைத்துக் கொடுக்க முடியாத நிலைமைகளும் இருக்கின்றன. மேலும் அந்தந்த வட்டாரத்து மாணவர்கள் படிக்க வாய்ப்பாகப் பள்ளிகள் அமைந்திருக்கவேண்டும். ஆனால், பயிற்சிப் பள்ளிகள் அங்கேயே இருக்கவேண்டும் என்பதில்லை. எங்கேயிருந்தாலும், எந்த இடத்தில் இருப்பவர்களும் வேறு வேறு இடங்களுக்குப் போய் வேலை செய்யும் நிலைமைகளும் இருக்கின்றன. ஆகவே, ஆசிரியர்களும் போதுமானவர்களாக இருக்கிறார்கள். சொல்லப்போனால், அதிகமாகக்கூட இருக்கிறார்கள். அவர்களை எப்படி ஈர்ப்பது என்பதில்தான் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. மேற்கொண்டு பயிற்சிப் பள்ளிகள் துவங்குவதாக இல்லை.

திரு. வ. க. இராமராசன் : பவானி சாகரில், ஏராளமாக காலியான கட்டடங்கள் இருக்கின்றன. அங்கே ஒரு ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியைத் துவக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண் மிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அப்படிக் காலிக் கட்டடங்கள் இருக்குமேயானால், அவற்றை வேறு வகைகளில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதை ஆராய்ந்து செய்யலாம். ஆனால் அங்கே பயிற்சிப் பள்ளி வைப்பதற்கில்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, sometime back there was a proposal to introduce the subject of 'Teaching' as an optional subject in the high school curriculam, so that boys might take up

1968 பிப்ரவரி 29]

and read the subject and afterwards the duration of the training could be reduced. Subsequently the Government did not consider it. Will the Hon. Minister be pleased to state whether he will think of introducing the subject in the high school course ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். இப்பொழுது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கனம் அமைச்சர் இந்த இராச்சியம் பூராவிலும் (115) பயிற்சிப் பள்ளிகள் இருப்பதாகக் கூறினார்கள். இவற்றில் பெரும் பகுதி தனியார் கையில் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அவற்றில் பணம் கொடுக்கக்கூடியவர்களுக்குத்தான் இடம் கிடைக்கும் நிலைமைகள் இருந்து வருகின்றன என்பது கனம் அமைச்சருக்குத் தெரியும். இதையெல்லாம் உத்தேசித்து, அவற்றையெல்லாம் சர்க்கார்த் துறையிலேயே எடுத்து நடத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் இருப்பதையெல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்துவது என்பது முடியாத காரியம். மேலும் பண வசதியும், மற்ற நிலைகளும் வரும்போது அதைக் கவனிக்கலாம். ஏதாவது குறைபாடுகள் இருந்தால், அவற்றைத் திருத்தவும், மாற்றி அமைக்கவும், செம்மைப் படுத்தவும் எப்பொழுதும் சர்க்கார் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஐயா, பேஸிக் பயிற்சிப் பள்ளிகள் சரிவர நடைபெறவில்லை என்பது தெரிந்திருப்பதால், அத்தனை பள்ளிகளையும் நான்-பேஸிக் பள்ளிகளாக மாற்றியமைக்க வேண்டும் என்கிற உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், மெள்ள மெள்ள அந்த வகையில் மாற்றிவரும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்று.

கூட்டுறவு நூற்பாலைகள்

* 102 வினா—**திரு. பெ. மலைச்சாமி :**
திரு. வி. கே. கோதண்டராமன் : } மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலைக்கும் போட்ட மூலதனம் எவ்வளவு ?

(இ) ஒவ்வொன்றிலும் 1966–67-ம் ஆண்டுக்குரிய லாபம், நட்டங்கள் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) and (இ) சட்டப் பேரவைமுன் ஓர் விவர அறிக்கை a சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன்—

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, பொதுவாக இந்த ஆலைகள் சம்பந்தமாக . . .

THIRU K. VINAYAKAM : Is the hon. Member Thiru V. K. Kothandaraman or Thiru Malaichami ? You were pleased to call Thiru Kothandaraman, but Thiru Malaichami is putting a question. He is flouting your orders.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பிவிட்டதால், திரு. கோதண்டராமன் அவர்களே, கேட்கட்டுமே.

---

a 221–222-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.